மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
Mount Druitt Tamil Study Centre

Mobile: 0413 229 638 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au





# ஆண்டு 1

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

அனைவருக்கும் அன்பான வணக்கம் .......

## தைப்பொங்கல்

அதிகாலை அம்மா எழுந்து
முற்றத்திலே கோலம் போட்டு
மூன்று கல்லும் வைத்து
அதன் மேலே பானை வைத்து
பாலும் மெல்லப் பொங்கி வர
பொங்கலோ பொங்கல் சொல்லி
பானையிலே அரிசி பயறு வெல்லம் இட்டு
மெல்ல மெல்லக் கிண்டிடுவோம்

தலை வாழை இலை விரித்து
தண்ணீர் கொஞ்சம் தெளித்து
பொங்கல் பழம் கரும்பு வைத்து
உழவர்களுக்கும் சூரியனுக்கும்
நன்றி சொல்லி இனிக்க இனிக்க
பொங்கல் உண்டு அதோடு பலகாரமும்
இனிதே உண்டு பாலர் நாங்கள்
தைப் பொங்கலைக் கொண்டாடிடுவோம்

நன்றி.
வணக்கம்.



ஆக்கம்:
திருமதி. கஜந்தி சதீஸ்கரன்
திருமதி. கௌரிஉஷா சந்திரசேகர்

பேச்சுப் போட்டி எதிர்வரும் 31.05.2025 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.